**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 371 of 2022**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : நாகம்மாள்** | **Father/Husband's Name : மாசாணம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.03.2026.**

**A1 to A6 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் பழனிச்சாமி, ஆறுமுகம், கருப்புசாமி எனது கணவரின் உடன் பிறந்த தம்பிகள். எதிரி மாசாணி எனது நாத்தனார். எதிரி புஸ்பா மேற்படி ஆறுமுகத்தின் மனைவி. எதிரி கம்மாடச்சி எனது மாமியார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கைரேகை வைத்தேன். நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். சாட்சி அய்யர் எனது தம்பி. அவர் இறந்துவிட்டார். சாட்சி ஆராயி எனது அம்மா. அவர் இறந்துவிட்டார். எனது கணவர் மாசாணம் இறந்துவிட்டார். கடந்த 2018ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். பின்னர் ஒரு போக்குவண்டி மூலம் நானும், எனது அம்மா ஆராயி, எனது கணவர் மாசாணம் ஆகியோர்களுடன் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 09.05.2018ம் தேதி மாலை சுமார் 4.15 மணியளவில் ஆஜர் எதிரிகள் ஒன்று சேர்ந்து கெட்ட வார்த்தை பேசி முழு சொத்தை அமுக்க பார்க்குறீர்களா என

கேட்டு என்னை தலை முடியை பிடித்து கையால் அடித்து, அறிவாளால் தலையில் வெட்டினார் எனவும், எதிரி ஆறுமுகம் அறிவாளால் என் அம்மாவின் தலையில் வெட்டினார் எனவும், எனது கணவரை மாமியார் கம்மாடச்சி கையால் அடித்தும், குச்சியால் அடித்தார் எனவும், பின்னர் அக்கம்பக்கத்தினர் வரவே ஆஜர் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், பின்னர் நானும், எனது அம்மா ஆராயி, எனது கணவர் மாசாணமும் ஒரு போக்குவண்டியின் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தோம் எனவும் போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **சமாதான கடிதம் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** சமாதான கடிதத்தில் எதிரிகள் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.03.10 18:22:20 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 371 of 2022**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : பெருமாள்** | **Father/Husband's Name : மாரியப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.03.2026.**

**A1 to A6 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அழகாபுரியில் மேற்கு தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் பழனிச்சாமி, ஆறுமுகம், கருப்புசாமி எனது அக்கா கணவரின் உடன் பிறந்த தம்பிகள். எதிரி மாசாணி எனது எனது அக்காவின் நாத்தனார். எதிரி புஸ்பா மேற்படி ஆறுமுகத்தின் மனைவி. எதிரி கம்மாடச்சி எனது அக்காவின் மாமியார். எதிரிகளுடன் எனது அக்கா சமாதானமாக சென்றுவிட்டார். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 09.05.2018ம் தேதி மாலை சுமார் 4.15 மணியளவில் ஆஜர் எதிரிகள் ஒன்று சேர்ந்து கெட்ட வார்த்தை பேசி முழு சொத்தை அமுக்க பார்க்குறீர்களா என கேட்டு அ.சா.1ஐ தலை முடியை பிடித்து கையால் அடித்து, அறிவாளால் தலையில் வெட்டினார் எனவும், எதிரி ஆறுமுகம் அறிவாளால் என் அம்மாவின் தலையில் வெட்டினார் எனவும், என் அக்காவின் கணவரை என் அக்காவின் மாமியார் கம்மாடச்சி கையால் அடித்தும், குச்சியால் அடித்தார் எனவும், பின்னர் அக்கம்பக்கத்தினர் வரவே ஆஜர் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், பின்னர் என் அக்காவும், எனது அம்மா ஆராயி, எனது அக்கா கணவர் மாசாணமும் ஒரு போக்குவண்டியின் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் எனவும், மேற்படி சம்பவத்தை

நான் நேரில் பார்த்தேன் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சமாதான கடிதத்தில் எதிரிகள் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.10 18:22:37 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.